4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. **M.** நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ.வ.எண். **33/2023** | நாள்: **12.08.2025** | வா.சா.**1** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **நடராஜன்** | தொழில் | : | ஓய்வு பெற்ற காவல் துணை கண்காணிப்பாளர் |
| த/பெ | : | மாரப்ப கவுண்டர் | கிராமம் | : | சூலூர் |
| வயது | : | 71 | தாலுகா | : | கோவை |
| | | | மாவட்டம் | : | **கோவை** |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

முதல் விசாரணை -

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு முதலாவது ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

வா.சா.ஆ.1 – 24.12.2018 தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் அசல்

வா.சா.ஆ.2 – 01.11.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்

வா.சா.ஆ.3 – அதை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை

வா.சா.ஆ.4 – எனது ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது.

வா.சா.ஆ.5 – எனது வருமான வரி கணக்கு பட்டியல் புகைப்பட நகல்

வா.சா.ஆ.6 – 04.12.1985 தேதியிட்ட பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.7 – தாவா சொத்து சம்பந்தப்பட்ட வில்லங்க சான்றிதழ் பதிவிறக்க நகல்

வா.சா.ஆ.8 – எனது பட்டய கணக்காளர் வழங்கிய சான்றிதழ் நகல்

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.